Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் சனிக்கிழமை, ஜூலை 31, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 16

# இந்தியா-ரஷ்யா(இந்திரா) கடற்படை-21 கூட்டு பயிற்சியில் ஐஎன்எஸ் தபார் பங்கேற்பு

*புதுதில்லி, ஜூலை 31, 2021:* இந்தியா, ரஷ்யா கடற்படை இடையே இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைப்பெறும் 'இந்திரா கடற்படை' 12வது கூட்டு பயிற்சி பால்டிக் கடலில் கடந்த 28ம் தேதி முதல் 29ம் தேதி வரை நடந்தது. இந்த கூட்டு பயிற்சி முதன் முதலில் கடந்த 2003ம் ஆண்டு தொடங்கியது. இந்த கூட்டு பயிற்சி இரு நாட்டு கடற்படைகள் இடையேயான நீண்ட கால யுக்தி கூட்டுறவை எடுத்துக் காட்டுகிறது. ரஷ்ய கடற்படையின் 325 ஆண்டு விழாவில் பங்கேற்க ஐஎன்எஸ் தபார் போர்க்கப்பல் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சென்றது. அதன் ஒரு பகுதியாக இந்திரா கடற்படை-21 பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. ரஷ்ய கடற்படை சார்பில் ஆர்.எஃப்.எஸ் ஜெலியோனி டால் மற்றும் ஆர்.எஃப்.எஸ் ஒடிண்ட்சோவோ ஆகிய போர்கப்பல்கள் பங்கேற்றன. இரண்டு நாட்கள் நடந்த கூட்டு பயிற்சியில் வான் தாக்குதலை முறியடிப்பது, கப்பல்கள் இடையே சரக்கு பரிமாற்றம், எரிபொருள் பரிமாற்றம், ஹெலிகாப்டர் செயல்பாடுகள் உட்பட பல பயிற்சிகள் மேற்கொளளப்பட்டன. கொவிட் கட்டுப்பாடுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட, இந்த கடற்படை கூட்டு பயிற்சி, பரஸ்பர நம்பிக்கை, இயங்குதன்மை, சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து



கொள்வது ஆகியவற்றை வலுப்படுத்த உதவியது. இருநாட்டு கடற்படைகள் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தியதில் இந்த கூட்டுபயிற்சி மற்றொரு மைல்கல் சாதனை மற்றும் இரு நாடுகளுக்கு இடையேயான நீண்ட கால நட்பை மீண்டும் உறுதி செய்துள்ளது.

# திண்டிவனம் காவல் உட்கோட்டத்தில் ஆட்கள் பற்றாக்குறை தொடர் குற்ற சம்பவங்களால் விழிபிதுங்கும் அதிகாரிகள்

## மாவட்ட எஸ்.பி., நடவடிக்கை எடுப்பாரா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு

*திண்டிவனம், ஜூலை 31 2021:* திண்டிவனம் காவல் கோட்டத்தில் காவலர்கள் பற்றாக்குறையால் விழிபிதுங்கும் காவல்துறை. தொடரும் குற்றச் சம்பவங்களால் தமிழக அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.


விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் காவல் உட்கோட்டத்தில் திண்டிவனம் நகர காவல் நிலையம், அனைத்து மகளிர் காவல் நிலையம், போக்குவரத்து காவல் நிலையம், ஒலக்கூர், ரோசனை, வெள்ளிமேடுபேட்டை, மயிலம், பிரம்மதேசம் ஆகிய 8 காவல் நிலையங்களை உள்ளடக்கியது. இந்தக் காவல் நிலையங்களில் பணிபுரிந்து வந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட காவலர்கள் விழுப்புரம், செஞ்சி, கோட்டகுப்பம் உள்ளிட்ட பகுதிகளுக்கு கடந்த சில தினங்களுக்கு முன்பு மாறுதலாகி சென்றுவிட்டனர். இந்த நிலையில் குறிப்பாக திண்டிவனம் நகர காவல் நிலையத்தில் சுமார் 35 காவலர்களின் பணியிடங்கள் காலியாகவும், அதே போல் போக்குவரத்து காவல் நிலையத்தில் ஒரு ஆர்.ஐ., ஒரு ஏட்டு, 3 காவலர்கள் என 5 பேர் மட்டுமே பணியில் இருப்பதால் திண்டிவனம் நகரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், விபத்து மற்றும் திருவிழாக்கள், கட்சியினரின் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என அனைத்திற்கும் சென்று பாதுகாப்பு பணியை திருப்திகரமாக செய்ய முடியாத நிலை உள்ளது. இதே நிலைதான் திண்டிவனம் உட்கோட்ட காவல் நிலைய கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் இருந்து வருகிறது.



இந்த நிலையில் கடந்த பத்து தினங்களில் மட்டும் திண்டிவனம், மயிலம், ஒலக்கூர், பிரம்மதேசம், வெள்ளிமேடுபேட்டை என அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சங்கிலித் தொடர் போன்று வழிப்பறி, இருசக்கர வாகனத்திருட்டு, வீடு புகுந்து திருட்டு, வீட்டினுள் ஆட்கள் இருக்கும் பொழுதே வீட்டை உடைத்து உள்ளே புகுந்து திருட்டு என்பது உள்ளிட்ட பல்வேறு குற்ற சம்பவங்கள் நடந்து வருவது போலீசாருக்கு தலைவலியாக இருந்து வருகிறது. கடந்த இரு தினங்களுக்கு முன்பு திண்டிவனம் நகர காவல்நிலையத்திற்கு ஆய்வு மேற்கொள்ள வந்த டி.ஐ.ஜி., பாண்டியன், எஸ்.பி., ஸ்ரீநாதா காவல் ஆய்வாளர்களிடம் இரவு ரோந்து பணியை துரிதப்படுத்த வேண்டும் எனவும், அவரவர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இனிவரும் காலங்களில் குற்ற சம்பவங்கள் நிகழுமாயின் அதற்கு அந்தந்த காவல் ஆய்வாளர்கேளே முழு பொறுப்பேற்க வேண்டும். மேலும் அவர்களுக்கு "மெமோ" வழங்கப்படுமென கடுமையாக எச்சரிக்கை விடுத்ததாக தெரிகிறது. ஆட்கள் பற்றாக்குறையால் விழி பிதுங்கி நிற்கும் திண்டிவனம் காவல் துறையினர், அதிகாரிகளின் உத்தரவால் என்ன செய்வதென்று திகைத்து நிற்கின்றனர். இரவு ரோந்து பணியை மேற்கொள்ளும் காவலர்கள் தொடர்ந்து பகல் நேர பணியை மேற்கொள்ளும் பொழுது சோர்வடைவதுடன், மனதளவில் பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு உள்ளாகி வரும் நிலை இருந்து வருகிறது. காவலர்களுக்கும் குடும்பம் இருக்கின்றது. பணிச்சுமையும், மனச் சுமையும் அதிகரித்து வரும் வேளையில் இவர்களால் தங்களது குடும்பத்தை கவனிக்க முடியாத நிலை தொடர்ந்து வருகிறது. இதன் காரணமாக பல போலீசார் தங்களது மனைவி, குழந்தைகளைப் பிரிந்து "பேச்சுலர்" வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். ஆகவே மாவட்ட காவல்துறை திண்டிவனம் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து காவல் நிலையங்களில் இருந்து மாறுதலாகி சென்ற காவலர்களுக்கு பதிலாக மாற்று காவலர்களை பணியமர்த்துவதன் மூலமே இப்பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் குற்ற சம்பவங்களை குறைப்பதுடன், மனச்சுமையுடன் பணிபுரியும் காவலர்கள் தங்கள் பணிகளை செம்மையாக செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதே ஒட்டு மொத்த பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.

# முன்னாள் அ.இ.அ.தி.மு.க. அமைச்சர் டி. ஜெயக்குமாருக்கு பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பதிலடி

*சென்னை, ஜூலை 31 2021:* "தமிழ்நாடு சட்டமன்றத்தில் தலைவர் கலைஞர் உருவப்படம் திறப்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் விழா கொண்டாட வேண்டும் என்பதற்காக வரலாற்றை மாற்றக்கூடாது" என்று முன்னாள் பேரவைத் தலைவர் ஜெயக்குமார் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். பேரவைத் தலைவராக இருந்தவருக்கு வரலாறு தெரியாதது வருத்தமளிக்கிறது. 1919-ஆம் ஆண்டில் மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்களின் அடிப்படையில் தேர்தல் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்டமன்றங்களில் முதன்முதலாக இடம்பெறத் தொடங்கினர். சென்னை மாகாண மன்றத்திற்கு 1920-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ஆம் நாள் நிகழ்ந்த பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி, சுப்பராயலு ரெட்டியார் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமைச்சரவை பொறுப்பேற்றது. 1921-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பன்னிரண்டாம் நாள் கன்னாட் கோமகன் முதல் மாகாண சுயாட்சிச் சட்டமன்றம் தொடங்கி வைக்கப்பட்டது. பனகல் ராஜா, டாக்டர் பி. சுப்பராயன், முனுசாமி நாயுடு, பொப்பிலி ராஜா, பி.டி. இராசன், குர்மா வெங்கடரெட்டி நாயுடு என நீதிக்கட்சியின் முதலமைச்சர்கள் 17 ஆண்டுக் காலம் பதவி வகித்தார்கள். மேற்காணும் முதலமைச்சர்களில் ஒருவரான டாக்டர் பி. சுப்பராயன் ஆட்சிக்காலத்தில் இடஒதுக்கீடு வழங்கி, அரசாணை அமல்படுத்தப்பட்டது. எனவேதான், டாக்டர் பி. சுப்பராயன் திருவுருவப் படம் பேரவையில் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் 23.3.1947 முதல் 6.4.1949 வரை ஓ.பி. இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபோது, நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தது. எனவே, அவருடைய திருவுருவப் படமும் பேரவையில் திறந்து வைக்கப்பட்டது. ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்ற வரலாறு 1921-ஆம் ஆண்டே தொடங்கி விட்டது. 1-4-1921-ஆம் நாளன்று, நீதிக்கட்சி ஆண்ட காலத்தில்தான் வாக்காளர் பட்டியலில் மகளிரும் இடம்பெறும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1989-ஆம் ஆண்டு கலைஞர் கொண்டாடப்பட்ட பொன்விழா பற்றி திரு. ஜெயக்குமார் குறிப்பிட்டுள்ளார். அப்போது ஒரு மலர் வெளியிடப்பட்டது. அந்த மலரில் எங்கள் தலைவர் கலைஞர் எழுதிய அணிந்துரை இடம்பெற்றுள்ளது. அதில் அவர், "தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு வயது இன்று 52" என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். சட்டப்பேரவை, சட்டமன்றப் பேரவை அன்று. டி. ஜெயக்குமார் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேரவைத் தலைவராக இருந்தவர், சட்டப் பேரவைக்கும், சட்டமன்றப் பேரவைக்கும் உள்ள வேறுபாடு அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். 1937-ஆம் ஆண்டில் மதராஸ் மாகாணச் சட்டமன்றம், சட்டமன்ற மேலவையாகவும், வாக்குரிமை பெற்ற வயது வந்த அனைத்து மக்களாலும் நேரிடையாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட சட்டப்பேரவையாகவும் செயல்படும் முறை பிறந்தது என்பதன் அடிப்படையில் 1989-ஆம் ஆண்டில் சட்டப்பேரவையின் பொன் விழா கொண்டாடப்பட்டது. 1997-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பவளவிழா மற்றும் சட்டமன்றப் பேரவை வைரவிழா தலைவர் கலைஞர் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழா கொண்டாடும் நோக்கத்திற்காக வரலாற்றை மாற்றி எழுதக்கூடாது என ஜெயக்குமார் கூறியிருக்கிறார். எதற்காக மாற்றி எழுத வேண்டும்? நூற்றாண்டு விழாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தால்தான் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும், தமிழ்நாடு ஆளுநரும் பங்கு பெறுவதற்கு சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள்.



ஜெயக்குமார் சொன்னதுபோல, மக்களை முட்டாளாக்கும் முயற்சியில் நாங்கள் செயல்படவில்லை, அனைவரையும் அறிவாளிகளாக்கும் முயற்சியில்தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. டி. ஜெயக்குமார் அமைச்சராக இருந்த போதும் ஒருவருக்கும் புரியாத கருத்தைப் பேரவையில் சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுவார். அப்போதெல்லாம் நாங்கள் அவருடைய பேச்சைக் காமெடியாகத்தான் எடுத்துக்கொள்வோம். சட்டமன்றப் பேரவைத் தலைவராகப் பணியாற்றிய இவரைப் பதவியேற்ற ஓராண்டிலேயே அம்மையார் ஜெயலலிதா பதவியை விட்டு நீக்கியது ஏன் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இந்த அறிக்கையின் மூலம் அவர் தன்னுடைய அறியாமையை வெளிப்படுத்தி இருக்கிறார். இதுபோன்ற உண்மைக்கு மாறான கருத்துகளைத் திரித்து கூறுவதை அவர் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஹலோ மிரர் மெட்ராஸில் விளம்பரம் செய்து பயன் பெறுவீர்

# பூமி

மலையும் காடுகளும் மரணப் படுக்கையில் இருக்க
மாமனிதரோ மரங்களை வெட்ட
கார் மேகம் சூழ்ந்து இருள, மாரி பொழிய
மீளா வெள்ளம் ஓட
மண்ணை விட்டு விண்ணில் சென்று வாழும் நாள் நேரிடுமோ

~ஸ்ருதி சத்யா







# கள்ளக்குறிச்சியில் விவசாயிகளுக்கான சான்று வழங்கும் முகாம் முறையான அறிவிப்பு இல்லாததால் விவசாயிகள் குறைவு : கலெக்டர் டென்ஷன்

விழுப்புரம், ஜூலை 31 2021: கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் முறையான அறிவிப்பு இல்லாததால் சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று வழங்கும் முகாமில் அதிகளவில் விவசாயிகள் வராததால் கலெக்டர் டென்ஷன்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை - திருச்சி ரோட்டில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வேளாண்மை துறை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத் திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு சான்று வழங்கும் சிறப்பு முகாம் நேற்று முன்தினம் நடந்தது. முகாமில் உளுந்தூர்பேட்டை, செங்குறிச்சி குறுவட்டத்தில் உள்ள விவசாயிகள் விண்ணப்பித்து சிறு, குறு விவசாயிகள் சான்று பெற்றுக் கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டது.

இதற்காக வி.ஏ.ஓ.,க்கள், கிராம உதவியாளர்கள், வருவாய் ஆய்வாளர்கள், வேளாண்மை அலுவலர்கள் முகாமிற்கு வந்தனர். ஆனால் விவசாயிகளுக்கு முகாம் குறித்து எந்த தகவலையும் தெரிவிக்காததால் விவசாயிகள் கூட்டமில்லை. முகாமில், அலுவலர்களின் எண்ணிக்கையைவிட விவசாயிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. காலை 11:15 மணியளவில் முகாம் நடந்த இடத்திற்கு வந்த கலெக்டர் ஸ்ரீதர், விவசாயிகள் அதிகளவில் இல்லாததால் டென்ஷனாகி, 2 பேருக்கு மட்டும் சான்றிதழ் வழங்கி விட்டு வந்த வேகத்திலேயே புறப்பட்டுச் சென்றார்.

முகாம் குறித்து முன்கூட்டியே தகவல் தெரிவிக்காத வேளாண் அலுவலர்களின் அலட்சியப்போக்கு விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே முள்ளிப்பள்ளம் கிராமத்தில் இந்திய சுதந்திரதின 75வது ஆண்டு நினைவு நாளையொட்டி மரக்கன்று நடும் விழா நடைபெற்றது

சோழவந்தான், ஜூலை 31 2021: மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே முள்ளிப்பள்ளம் கிராமத்தில் இந்திய சுதந்திர தினத்தின் 75வது ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. காடுபட்டி சாலையிலுள்ள பகுதிகளில் புங்கை மரம், வேப்பமரம் உள்ளிட்ட பல்வேறு வகையான மரக்கன்றுகளை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாண்டியன், ரத்தின கலாவதி, நட்டனர். இதில் உதவி பொறியாளர் பூம் பாண்டியன், மோகன் ஊராட்சி மன்ற தலைவர் பழனிச்சாமி, துணைத் தலைவர் கேபிள் ராஜா, ஊராட்சி செயலர் மனோ பாரதி, வார்டு உறுப்பினர்கள் முள்ளை சக்தி, முனீஸ்வரி, சித்ரா இளங்கோவன், பணித்தள பொறுப்பாளர்கள் சந்திரபிரபா, சித்ராதேவி மற்றும் மன்னாடிமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் பவுன் முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# சுமார் 2.18 கோடி கொவிட் தடுப்பூசி டோஸ்கள் : மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கையிருப்பு

புதுதில்லி, ஜூலை 31, 2021: நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய அரசு இதுவரை, 46.23 கோடிக்கும் அதிகமான (46,23,27,530) கொவிட் தடுப்பூசி டோஸ்களை, மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும், இலவசமாக வழங்கியுள்ளது. மேலும் கூடுதலாக 1,20,70,820 தடுப்பூசிகள் வழங்கப்படவிருக்கின்றன.

இன்று காலை 8 மணி வரையிலான தரவுகளின் அடிப்படையில், மொத்தம் 44,29,95,780 டோஸ் தடுப்பூசி (வீணானவை உட்பட) பயன்படுத்தப்பட்டுள்ளன.

சுமார் 2.18 கோடி (2,18,10,422) கொவிட் தடுப்பூசி டோஸ்கள், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளின் கையிருப்பில் உள்ளன.

# மாவட்ட அளவிலான தரவுகளை உருவாக்குவதற்கு செரோ பரவல் ஆய்வுகளை ஐசிஎம்ஆர் உடன் ஆலோசித்து மேற்கொள்ளுமாறு மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுரை

புபுதுதில்லி, ஜூலை 31, 2021: உள்ளூர் அளவில் பொது சுகாதார தடுப்பு நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கு அவசியமான செரோ பரவல் ஆய்வுகளை, மாவட்ட அளவிலான தரவுகளை உருவாக்குவதற்கு இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் ஆலோசித்து மேற்கொள்ளுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. அனைத்து மாநிலங்களின் கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதன்மைச் செயலாளர்/ சுகாதார செயலாளர்களுக்கு மத்திய சுகாதார செயலாளர் எழுதியுள்ள கடிதத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மேற்கொண்ட 4-வது கட்ட தேசிய செரோ பரவல் ஆய்வுகளின் முடிவுகளை மேற்கோள்காட்டி, நிலையான நெறிமுறைகளை இதுபோன்ற ஆய்வுகளில் மேற்கொண்டு, கொவிட்-19 தொற்றுக்கு எதிராக ஆதாரங்களின் அடிப்படையிலான பொது மருத்துவ நடவடிக்கையை வெளிப்படையாக மேற்கொள்வதற்கு, சம்பந்தப்பட்ட மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களுக்கு வழிகாட்டும் வகையில் இந்த ஆய்வுகளின் முடிவுகளை பயன்படுத்துவதற்கு ஏதுவாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் ஆலோசித்து இந்த ஆய்வுகளை தங்களது மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளுமாறு மத்திய சுகாதார அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், இந்தியாவின் 70 மாவட்டங்களில் அண்மையில் தேசிய செரோ ஆய்வை மேற்கொண்டது. தேசிய அளவில் கொவிட் தொற்றின் பரவலை கண்டறிவதற்காக தேசிய ஆய்வை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வடிவமைத்தது. இந்த ஆய்வு முடிவுகள் மாவட்டங்கள் மற்றும் மாநிலங்கள் இடையேயும் செரோ பரவலின் பன்முகதன்மையை பிரதிபலிக்கவில்லை.

# மிளகாயின் அரசன் என்ற மிளகாய் வகை நாகாலாந்திலிருந்து முதன்முறையாக லண்டனுக்கு ஏற்றுமதி

புதுதில்லி, ஜூலை 31, 2021: வடகிழக்குப் பகுதிகளில் இருந்து புவிசார் குறியீட்டு அங்கீகாரம் பெற்ற பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் நாகாலாந்தில் இருந்து 'மிளகாயின் அரசன்' என்று அழைக்கப்படும் மிளகாய் வகை முதன்முறையாக குவஹாத்தி வழியாக லண்டனுக்கு இன்று ஏற்றுமதி செய்யப்பட்டது. உலகின் மிக காரமான மிளகாய் என்று கருதப்படும் இந்த வகை மிளகாய், நாகாலாந்தின் பெரென் மாவட்டத்தைச் சேர்ந்த டெனிங் பகுதியில் இருந்து பெறப்பட்டு, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி வளர்ச்சி ஆணையமான அபெடா ஆதரவுடன் குவஹாத்தியில் செயல்படும் கிடங்கில் ஏற்றுமதிக்காக அனுப்புவதற்கு தயார் செய்யப்பட்டது.

கடந்த 2008-ஆம் ஆண்டு நாகாலாந்தின் இந்த மிளகாய்க்கு புவிசார் குறியீட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

வடகிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி, ஏற்றுமதி வரைபடத்தில் இந்தப் பகுதியில் உள்ள மாநிலங்கள் இடம் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை அபெடா அமைப்பு மேற்கொள்ளும். திரிபுராவின் பலாப்பழங்களை லண்டன் மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கும், அசாமின் எலுமிச்சம்பழத்தை லண்டனுக்கும், அசாமின் சிவப்பு அரிசியை அமெரிக்காவிற்கும், லெடேகு திராட்சைப் பழங்களை துபாய்க்கும் 2021-ஆம் ஆண்டில் அபெடா ஏற்றுமதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# புற்றுநோய் சிகிச்சைக்கான நைஸ் முறை குறித்த ஊடக செய்திகளுக்கு மறுப்பு

மும்பை, ஜூலை 31, 2021: ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் புனேவில் உள்ள தேசிய இயற்கை மருத்துவ நிறுவனம், டாக்டர் பிஸ்வரூப் ராய் சௌத்ரியின் நைஸ் சிகிச்சை முறையை லேசானது முதல் தீவிர கொவிட்-19 தொற்றுள்ள நோயாளிகளுக்கு பரிந்துரைப்பதாக சில ஊடக செய்திகள் தெரிவித்துள்ளன. இந்த செய்தி முற்றிலும் தவறானது மற்றும் நைஸ் கூறிய தவறான தகவல்களின் அடிப்படையிலானது. நெட்வொர்க் ஆஃப் இன்புளூயென்சா கேர் எக்ஸ்பர்ட்ஸ் எனப்படும் நைஸ் உருவாக்கியுள்ள சிகிச்சை முறைக்கு ஆயுஷ் அமைச்சகம் ஒப்புதல் அளிக்கவில்லை என்று தேசிய இயற்கை மருத்துவ நிறுவனம் தெளிவு படுத்துகிறது.

கொவிட்-19 சிகிச்சையில் இயற்கை மருத்துவத்தில் சிறந்த செயல்முறைகளை தேசிய இயற்கை மருத்துவ நிறுவனம் ஆவணப்படுத்துகிறது. இது தொடர்பாக, அகமது நகரில் உள்ள நைசால் மேற்கொள்ளப்பட்ட செயல்முறைகளை குணப்படுத்துவதற்காக ஆய்வு ஒன்றை நிறுவனம் மேற்கொண்டது. இது முழுக்க ஆராய்ச்சி நடவடிக்கையே தவிர செயல்முறைகளை அங்கீகரிக்கும் நடவடிக்கை அல்ல. சரியான கொவிட் நடத்தை விதிமுறைகள் தேவை இல்லை எனும் நைஸ் அறிக்கையை தேசிய இயற்கை மருத்துவ நிறுவனம் முற்றிலும் நிராகரிக்கிறது. 2021 ஜூலை 23 அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் நைஸ் வெளியிட்டதாக கூறப்படும் அறிக்கையையும், தனிநபர் பாதுகாப்புக் கவசங்கள், முகக் கவசங்கள் அணிய தேவையில்லை மற்றும் சமூக இடைவெளியை பின்பற்ற தேவையில்லை என்று சமூக ஊடகங்களில் பரவிவரும் காணொலி ஒன்றையும் நிறுவனம் முற்றிலும் நிராகரிக்கிறது

கொவிட் பெருந்தொற்றின் போது தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட அனைத்து வழிகாட்டுதல்களையும் தேசிய இயற்கை மருத்துவ நிறுவனம் முற்றிலும் பின்பற்றுகிறது. சமூக இடைவெளி, முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட சரியான கொவிட் நடத்தை விதிமுறைகளை நிறுவனம் முழுமையாக ஆதரிப்பதோடு, கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு அவை அவசியம் என்றும் கருதுகிறது.

# இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் கிரீமி லேயருக்கு ஒரே மாதிரியான விதிமுறை : மாநிலங்களவையில் தகவல்

புதுதில்லி, ஜூலை 31, 2021 : மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் (ஓபிசி) வசதியானவர்களுக்கான (க்ரீமிலேயர்) விதிமுறை, மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கு ஒரே மாதிரியாக உள்ளது என மாநிலங்களவையில் தெரிவிக்கப்பட்டது. மத்திய சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார், இணையமைச்சர்கள் சுஷ்ரி பிரதிமா பவுமிக், திரு ஏ. நாராயணசாமி ஆகியோர் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த பதிலில் கூறியதாவது: ஓபிசி பிரிவுக்கான க்ரீமி லேயர் விதிமுறை: மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் (ஓபிசி) வசதியானவர்களுக்கான (க்ரீமி லேயர்) விதிமுறை, மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கு ஒரே மாதிரியாக உள்ளது. இது தொடர்பாக எந்த விசாரணை விவரங்களும் பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையத்தால் (என்சிபிசி) வழங்கப்படவில்லை. தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கார்பரேஷனுக்கு வழங்கப்பட்ட நிதி: தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கார்பரேஷனுக்கு கடந்த 2018-19ம் ஆண்டில் ரூ.100 கோடியும், 2019-2020ம் ஆண்டில் ரூ.130 கோடியும், 2020-21ம் ஆண்டில் ரூ. 55.40 கோடியும் மத்திய அரசு வழங்கியுள்ளது. திருநங்கைகளுக்கான விரிவான திட்டம்: திருநங்கைகளுக்கு, விரிவான மறுவாழ்வு அளிக்கும் வகையில், பின்தங்கிய தனிநபர்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் தொழில் உதவி திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான வழிகாட்டுதல்கள் இறுதி செய்யப்பட்டபின் இணையதளத்தில் வெளியிடப்படும். திருநங்கைகளின் மேம்பாடு: திருநங்கைகளுக்கான தேசிய இணையதளம் 2020 நவம்பர் 25ம் தேதி தொடங்கப்பட்டது. இதன் மூலம் திருநங்கைகள் விண்ணப்பித்து, நேரடி தொடர்பு இல்லாமல் அடையாள சான்றிதழை பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம். திருநங்கைளின் பாதுகாப்புக்காக தமிழ்நாடு, மகாராஷ்டிரா, தில்லி, மேற்கு வங்கம், ராஜஸ்தான், பீகார், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் 'கரீமா கிரஹ்' என்ற பெயரில் பாதுகாப்பு இல்லங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் அடிப்படை வசதிகள், உணவு, மருத்துவ வசதி, பொழுது போக்கு வசதி, திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சமூக திட்டங்களுக்கான தணிக்கை: 2021-22ம் ஆண்டில் தகவல்-கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் சமூக தணிக்கை என்ற திட்டத்தை மத்திய சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகம் உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இத்துறையின் அனைத்து திட்டங்களும், இந்த நிதியாண்டில் தணிக்கை செய்யப்படும். மாநிலங்களின் சமூக தணிக்கை பிரிவுகள், மற்றும் ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் தேசிய மையம் மூலம் இந்த சமூக தணிக்கைகள் செய்யப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அடையாளம் கண்டு பட்டியலிடும் உரிமை அரசியல் சாசன (102வது) திருத்த சட்டம், 342-ஏ பிரிவை இந்திய அரசியல் சாசனத்தில் சேர்த்துள்ளது. இது சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய பிரிவினர் பொதுவாக இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - ஓபிசி) தொடர்புடையது. இந்தப் பிரிவு, ஒரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் தொடர்பான சமூக மற்றும் கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் மத்தியப் பட்டியலை குறிப்பிட குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது. மேலும், இந்த ஓபிசி மத்திய பட்டியலில் எந்த மாற்றமும், நாடாளுமன்றத்தால் மட்டுமே மேற்கொள்ள முடியும். தங்களின் ஓபிசி பட்டியலை வெளியிட மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லை. இதற்கான உத்தரவை உச்சநீதிமன்றம் கடந்த மே 5ம் தேதி பிறப்பித்தது. ஓபிசி பட்டியலை தீர்மானிப்பதில் மாநிலங்களின் அதிகாரத்தை காப்பதற்கான வழிகள் குறித்து சட்ட நிபுணர்கள், சட்ட அமைச்சகத்துடன் மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

# காதுல பூ போராட்டம் சாத்தூர் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் சார்பில் நூதன ஆர்ப்பாட்டம்

சாத்தூர், ஜூலை-31 2021: மத்தியில் ஆளும் மோடி அரசைக் கண்டித்து ,சாத்தூரில் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள்,காதில் பூவைச் சுற்றிக் கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஏழரை ஆண்டுகளாக அனைத்து தொழில்களையும் பொருளாதார தோல்வியடைய செய்தது, பொதுமக்களின் ஒவ்வொருவர் கணக்கிலும் ரூபாய் 15 லட்சம் செலுத்துவேன் என்று பொய்யான வாக்குறுதி அளித்தது போன்ற பொது மக்களின் காதுகளில் பூ சுற்றும் மோடி அரசை கண்டித்து காங்கிரஸ் தொண்டர்கள் காதுகளில் பூ சுற்றி மத்திய அரசை கண்டித்து சாத்தூர் தபால் நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




சாத்தூர் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி.எஸ்.அய்யப்பன் தலைமையில் நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட பொதுச்செயலாளர் ஜோதி நிவாஸ் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார்.

விருதுநகர் மேற்கு மாவட்ட செயலாளர் சந்திரன், கிழக்கு வட்டார காங்கிரஸ் தலைவர் சுப்பையா, விருதுநகர் மேற்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் மாயக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ,மத்திய அரசை கண்டித்து சாத்தூர் ஒன்றிய செயலாளர் ரமேஷ் கண்டன கோஷங்கள் எழுப்பினார். ஆர்பாட்ட ஏற்பாட்டை சாத்தூர் சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் தலைவர் கும்கி கார்த்திக் சிறப்பாக செய்திருந்தார்.போராட்டத்தில், மாவட்ட பிரதிநிதி வெள்ளைச்சாமி, நகர துணைத் தலைவர் சின்னப்பன், சிவாஜி மன்ற முன்னாள் தலைவர் காசி , ஐஎன்டியுசி வட்டார தலைவர் டெய்லர் மாரியப்பன், மேற்கு வட்டார தலைவர் சோலையப்பன், மாவட்ட துணைத்தலைவர் ஆறுமுகம் ,டெய்லர்சுதர்சன், நகர மாணவரணி தலைவர் சங்கரபாண்டியன், நகர பொதுச்செயலாளர் ரவி , சத்திரப்பட்டி லட்சுமன பெருமாள்,விருதுநகர் மேற்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் கனகராஜ், படந்தால் பாலநாயக்கர் ,கிழக்கு வட்டார செயலாளர் பரதன், கோவிந்தராஜ், சூரங்குடி ஆறுமுகம்,வெம்பக்கோட்டை இளைஞர் காங்கிரஸ் வட்டாரத் தலைவர் பனையடிப்பட்டி ஜெயக்குமார் மற்றும் காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகளும் தொண்டர்களும் காதுகளில் பூவைச் சூட்டிக் கொண்டு கலந்து கலந்து கொண்டனர்.

# மஹிந்திரா மேனுலைஃப் மியூச்சுவல் ஃபண்ட், 'மஹிந்திரா மேனுலைஃப் ஃப்ளெக்ஸி கேப் யோஜனா' திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது!

சென்னை, ஜூலை 31, 2021: மஹிந்திரா மேனுலைஃப் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட் , இது 51:49 மஹிந்திரா அண்ட் மஹிந்திரா ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (எம்.எம்.எஃப்.எஸ்.எல்) மற்றும் மேனுலைஃப் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் (சிங்கப்பூர்) பிரைவேட். லிமிடெட் 'மேனுலைஃப் சிங்கப்பூர்') இணைந்ததாகும்.

இந்த நிறுவனம், மஹிந்திரா மேனுலைஃப் ஃப்ளெக்ஸி கேப் யோஜனா என்கிற புதிய மியூச்சுவல் ஃபண்ட் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இது எப்போது வேண்டுமானாலும் முதலீடு செய்யும் மற்றும் முதலீட்டை பணமாக்கும் வசதி கொண்ட ஓபன் எண்டெட் டைனமிக் ஈக்விட்டி ஃபண்ட் ஆகும். இந்தத் திட்டத்தில் முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டப்படும் நிதி அனைத்து பங்குச் சந்தை மதிப்பு கொண்ட நிறுவனப் பங்குகளிலும் அதாவது லார்ஜ் கேப்; மிட் கேப் மற்றும் ஸ்மால் கேப் நிறுவனப் பங்குகளில் பிரித்து முதலீடு செய்யப்பட இருக்கிறது. இந்தத் திட்டம், நீண்ட கால மூலதன ஆதாயத்தை எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்கு ஏற்றதாக உள்ளது. அதாவது, அனைத்து பங்குச் சந்தை மதிப்புகளிலும், பங்கு மற்றும் பங்கு தொடர்பான பத்திரங்களின் பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுக் கலவையை (போர்ட்ஃபோலியோ) எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்கு பொருத்தமானது.

மஹிந்திரா மேனுலைஃப் ஃப்ளக்ஸி கேப் யோஜனா திட்டத்தில் முதலீட்டுக்கான நிறுவனப் பங்குகள், மேலிருந்து கீழ் அணுகுமுறை மற்றும் கீழிலிருந்து மேல் அணுகுமுறையில் தேர்வு செய்யப்படுகின்றன. இந்த ஃபண்டில் நெகிழ்வு தன்மையுடன் அனைத்து பங்குச் சந்தை மதிப்பு கொண்ட நிறுவனப் பங்குகளில் முதலீடு பிரித்து செய்யப்படுகிறது.

மேலும். முக்கிய முதலீட்டு வாய்ப்புகளை கொண்ட முதலீட்டுக் கலவையை, நடுத்தரம் முதல் நீண்ட காலத்தில் உருவாக்க உள்ளது. மேலும், சூழ்நிலைக்கு ஏற்ற முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதாகும். எடுத்துக்காட்டு, சுழற்சி துறை, பொருட்களின் சுழற்சி போன்றவை குறிப்பிடலாம். இந்த ஃப்ளக்ஸி கேப் ஃபண்டில், முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டும் நிதி குறைந்தபட்சம் பங்குச் சந்தை மற்றும் பங்குச் சந்தை சார்ந்த நிதி ஆவணங்களில் முதலீடு செய்யப்பட உள்ளது.

மஹிந்திரா மேனுலைஃப் இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட்- ன் நிர்வாக இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அதிகாரி அசுதோஷ் பிஷ்னோய் கூறும் போது, " கோவிட் -19 தொற்றுநோயின் கடுமையான இரண்டாவது அலையைத் தாண்டியும் இந்திய பங்குச் சந்தைகள் தங்கள் ஏற்றத்தை தக்கவைத்துள்ளன. 2020 மார்ச் மாதம் இறுதியில் நாடு தழுவிய ஊரடங்கு அறிவிக்கப்பட்டதிலிருந்து முக்கியப் பங்குச் சந்தை பெஞ்ச்மார்க் குறியீடுகள் கிட்டத்தட்ட இரட்டிப்பாகியுள்ளன. இருந்தாலும், உலகளாவிய பொருளாதாரங்களில் நிலவும் பல்வேறு நிச்சயமற்ற தன்மைகளால் பங்குச் சந்தைகள் நிலையற்றதாக ஏற்ற இறக்கத்துடன் இருக்கக்கூடும். ஃப்ளக்ஸி கேப் மியூச்சுவல் ஃபண்ட்கள், பங்குச் சந்தை சுழற்சிகளில் நிலையான வருமானத்தை வழங்க வல்லவை, மேலும் இடர்ப்பாடு மற்றும் வருவாய்க்கு இடையில் சமநிலையை உறுதி செய்யும் பல்வகைப்படுத்தப்பட்ட அணுகுமுறையால் லாபத்தை பெருக்கின்றன. எதிர்பார்க்கப்படும் பொருளாதார மீட்சியின் மூலம் ஏதேனும் சாத்தியமா ஏற்றம் மிட் கேப் மற்றும் ஸ்மால் நிறுவனப் பங்குகளில் காணப்பட்டால், மாறுவதற்கான நெகிழ்வுத்தன்மையை இந்த ஃபண்ட்கள் நன்கு கொண்டிருக்கின்றன." என்று குறிப்பிட்டார்.

# கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த மூங்கிலேரி ஊராட்சிக்குட்பட்ட கிராமத்தில் கொரோனோ தடுப்பூசி முகாம்

**கிருஷ்ணகிரி:** **கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த மூங்கிலேரி ஊராட்சிக்குட்பட்ட கிராமத்தில் கொரோனோ தடுப்பூசி முகாம் நடைபெற்றது,ஊராட்சி மன்ற தலைவர் உஷாநந்தினி வஜ்ஜிரவேல் அவர்கள் தலைமையில் கொரோனோ தடுப்பூசி செலுத்தப்பட்டது,இதில் மருத்துவர் ஸ்ரீ பால், கொங்கு நாடு மக்கள் தேசியகட்சி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் வஜ்ஜிரவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.**



# ‘அரங்கு நிறைய அமைச்சர்கள் ஆனாலும் நான் அழுகிறேன் ஓர் இடம் காலி‘

## - டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

விருதுநகர், ஜூலை 31, 2021: தங்கா' பாண்டியன்.. எனது அப்பா தங்கபாண்டியன் அவர்களைத் தலைவர் கலைஞர் இவ்வாறு அழைப்பது வழக்கம். சென்னைக்கு வரும்போது தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்த பின்னர், ஒரிரு நாட்கள் அங்கே தங்கியிருந்து தொடர்ச்சியாக தலைவரின் நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ளாமல், உடனடியாக ஊருக்குத் திரும்பிவிடும் வாடிக்கை அப்பாவுக்கு இருந்ததால், தலைவர் கலைஞர் அவர்கள் வேடிக்கையாக அவ்வாறு குறிப்பிடுவது வழக்கம்.

நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து, வயது முதிர்வின் காரணமாக தன் வாழ்க்கைப் பயணத்தின் இறுதிப் பகுதிக்கு வராமல், தலைவர் கலைஞரின் தனி அன்பைப் பெற்று அவரது பெருமைமிக்க அமைச்சரவையில் தொடர்ந்து பணியாற்றும் வாய்ப்பின்றி, திடீரென விடை பெற்றுக் கொண்டதால், ஒருவகையில் அவர் தங்காப்பாண்டியனாகவே இருந்துவிட்டாரோ என்ற எண்ணம் எனக்கும் அடிக்கடி ஏற்படுவதுண்டு.

அப்பாவின் அரசியல் பயணம் நெடியது. 1949ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்களோடு பேரறிஞர் அண்ணா அவர்கள் கருத்து வேற்றுமை கொண்டு தாய்க்கழகத்தை விட்டுப் பிரிய நேரிட்டபோது, அவரோடு இணைந்து வெளியே வந்தவர்களின் பட்டியலைக் “கண்ணீர்த் துளிகள்” எனும் தலைப்பில் ‘திராவிட நாடு' இதழில் அண்ணா அவர்கள் வெளியிட்டு வந்தார். அந்தப் பட்டியலில் ‘தங்கபாண்டி, திராவிட மாணவர் கழகம், கமுதி' என்ற பெயரோடு அப்பாவும் இடம்பெற்றதில் இருந்து அவரது அரசியல் வாழ்வு துவங்கியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கப்பட்ட பின்னர் 1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ஆம் தேதி கமுதியில் கிளைக்கழக உறுப்பினராகத் தன்னை இணைத்துக்கொண்ட நாள் முதல், தன் இறுதி மூச்சுவரை வாழ்விலும், தாழ்விலும் அவர் கழகத்துடனே ஒன்றியிருந்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சாயல்குடி எனும் சின்னஞ் சிறிய கிராமத்தில் பிறந்து, வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற தனது அபிலாஷைகள் அந்த கிராமத்தின் புழுதிபடர்ந்த தெருக்களில் மறைந்து போகுமோ என்ற அச்சத்தில் கண்மாய்க்கரையில் அமர்ந்து தன்னந்தனியே அழுது கொண்டிருந்ததாக அப்பா என்னிடம் ஒருமுறை சொன்னார். அந்த உந்துதலோடு படித்து, அவரது விருப்பப்படியே பிறகு ஆசிரியராகவும் ஆனார்.

1968ஆம் ஆண்டு மல்லாங்கிணறு அரசு உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அப்பாவுக்கு உடனடியாக சென்னை வந்து முதலமைச்சரைச் சந்திக்கச் சொல்லி ஓர் அவசர அழைப்பு!

ஒரு கிராமத்து பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியருக்கு முதலமைச்சரிடம் இருந்து வந்த அழைப்பு அவர் மனதில் மட்டுமல்ல, அந்த கிராமம் முழுவதும் பலவிதமான எண்ண ஓட்டங்களை எழுப்பி இருக்க வேண்டும். அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்பாவைப் பார்த்து ‘உன்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்க பரிந்துரை செய்திருக்கிறேன். கலைஞரைப் போய்ப்பார்' என்றார். அது அவரது வாழ்வில் ஒரு திருப்புமுனை. தலைவர் கலைஞரோ “யானை உனக்குத் தானாக மாலை போடுகிறது” என்று தனக்கே உரிய இலக்கியச் செழுமையோடு அப்பாவை அரவணைத்துக் கொண்டராம்.

அவரது அரசியல் வாழ்க்கை என்பது, இருமுறை மேலவை உறுப்பினர்; ஒன்றியப் பெருந்தலைவர்; கூட்டுறவு அமைப்புகளில் தலைவர்; சட்டமன்ற உறுப்பினர்; அமைச்சர் எல்லாவற்றுக்கும் மேலாக 23 ஆண்டு காலம் மாவட்டக் கழகச் செயலாளர்; ஓராண்டு மிசா சிறைவாசம்; எண்ணற்றப்

போராட்டங்கள், தேர்தல் தோல்விகள்; சிறைவாசம் என எல்லா நிலைகளையும் உள்ளடக்கியதாகவே இருந்திருக்கின்றது.

பதினான்கு ஆண்டுகளாக எதிர்க்கட்சி அரசியல் எண்ணற்ற இடர்பாடுகளை விளைவித்தாலும், கலைஞரின் பாலும், கழகத்தின் பாலும் அவர் கொண்டிருந்த திடமான பற்றும் கொள்கை உறுதியும் மட்டும் என்றும் மாறாதிருந்தன. கலைஞரை விட்டு விலகினால் சிறைவாசத்திலிருந்து தப்பிக்கலாம் என்ற ஆசை வார்த்தைகள் அவரை மயக்க முடியவில்லை. கழகத்தை விட்டு வெளியேறினால் பதவி சுகம் காத்திருக்கிறது என்ற பசப்பு வார்த்தைகள் அவரை அசைக்க முடியவில்லை. அதனால்தான் அவர் மறைவுற்றபோது கலங்கிய கண்களுடன் தலைவர் கலைஞர், என் குடும்பத்தில் ஒருவராக ஒன்றியவர் என்று அப்பாவைப் பற்றிக் குறிப்பிட்டார்.

தனிப்பட்ட வகையில் எனது முன்னேற்றத்தில் வழக்கமான தந்தைக்குரிய அக்கறையும், கண்டிப்பும் அப்பாவிடம் இருந்தது. அரசியல் நிழல் என் மீது படர்ந்துவிடக் கூடாது என்பதில் அவர் கவனமாக இருந்தார். தலைவர் மற்றும் தளபதி அவர்களின் வருகையின் போது மட்டுமே கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அனுமதித்த அவர், ஒவ்வோர் ஆண்டும் தைப் பொங்கல் நாளில் மட்டும் கழகத்தின் இருவர்ணக் கரை போட்ட வேட்டி ஒன்றை எனக்கு அளிப்பதையும் வழக்கமாக வைத்திருந்தார்.

அமைச்சர் பொறுப்பினை அவர் ஏற்றுக்கொண்ட இரவு என்னை அழைத்து, ‘நீ அமைச்சருக்கான கிரீன்வேஸ் சாலை இல்லத்தில் என்னோடு தங்கியிருக்க வேண்டாம்' என்று சொன்னார். பின்னாட்களில் அதே குடியிருப்பில் நானும் வசிக்க நேர்ந்தது ஒருவகையில் முரண்நகையே.

அம்மாவின் அன்பு அலைகளாக வெளித் தெரியும் ஒன்றென்றால், அப்பாவின் அன்பு என்பது ஆழ்கடல் நீரோட்டம் போன்றது. நள்ளிரவில் கூட ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் என்னை எழுப்பி அவர் மதுரையில் இருந்து வாங்கி வந்த ‘பிரேமா விலாஸ் முக்குக்கடை' அல்வாவை சாப்பிடச் சொல்லும் போது அவரையும் அறியாமல் ஆழ்மனதின் அன்பு வெளிப்பட்டு விடும். எந்தக் கூட்டத்தில் எங்கே இருந்தாலும், நான் விடுமுறை முடிந்து கல்லூரி விடுதிக்குச் செல்லும் நாளில் என்னை வழியனுப்ப வீட்டிற்கு அவர் வராமல் இருந்ததில்லை. நெஞ்சிலே பூட்டி வைத்துக்கொள்ள முடியாத நிகழ்வு ஒன்றுண்டு. நான் பொறியியல் பட்டப்படிப்பு முடித்து தூத்துக்குடியில் ‘ஸ்பிக்' நிறுவனத்தில் வேலைக்காக அழைப்பினைப் பெற்றிருந்தேன். என்னை அங்கே இருக்கும் விடுதியில் விட்டுவிட்டு அப்பா மட்டும் ஊர் திரும்பத் திட்டம். பிரியும் நேரம் வந்ததும் அப்பாவின் கண்கள் கலங்கி கண்ணீர்த் தாரை எட்டிப்பார்த்தது. நான் அழத்தொடங்கி விட்டேன். எங்கள் இருவரையும் பார்த்த அந்நிறுவனத்தின் மேலாளர் ஒருவர், “என்ன சார், பையன் வேலைக்குத் தானே சேர்ந்து இருக்கிறார். சின்னப் பையனை ஹாஸ்டலில் விட்டு விட்டுப் போவதைப் போல இப்படி அழுகிறீர்களே'' என்று கேட்டது, இன்னும் என் நினைவில் நிற்கிறது. தந்தை தாயுமாகி நின்ற தருணம் அது.

